**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

CC.No.3/2022
Prosecution witness.8

| | |
|---|---|
| பெயர் : டாக்டர்.திரு.சரவணமுத்து | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02nd day of December 2024.

குறிப்பு அரசு தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனு செய்து அந்த மனு Cr.M.P.No.4989/2024 Dt–18.09.2024 ம் தேதி அனுமதிக்கப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்படுகிறார்.

02.12.2024

(எதிரிகள் 1 முதல் 5 ஆஜர் இல்லை. 1 முதல் 5 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை**

**1.** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் எலும்பு முறிவு மற்றும் விபத்து சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 17.08.2021 ம் தேதி மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது கீழகன்னிசேரி கிராமத்தை சேர்ந்த முனியம்மாள், க.பெ.வெள்ளிமுத்து என்பவர் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையின் பரிந்துரையின் படி மேல் சிகிச்சைக்காக வந்தார்.

**2.** முனியம்மாள் என்னிடம் அவரை அடையாளம் தெரிந்த நபர்களால் தாக்கப்பட்டதில் இடுப்பு பகுதியில் வலி மற்றும் வேதனையுடன் வந்திருந்தார். முனியம்மாளை பரிசோதித்தும் நூண்கதிர் புகைப்படம் எடுத்து பார்த்தபோது முனியம்மாளுக்கு வலது தொடை எலும்பில் எலும்பு முறிவு இருப்பது

தெரிந்தது. முனியம்மாளுக்கு தேவையான ரத்த பரிசோதனைகள் எடுக்கப்பட்டன. மேலும் சர்க்கரை நோய்க்கான பரிசோதனை மருத்துவம் அளிக்கப்பட்டது. பிறகு 30.08.2021 ம் தேதி சிகிச்சை முடிந்து வீட்டிற்கு அனுப்பப்பட்டார். மேற்படி காயத்திற்கு நான் சிகிச்சை அளித்து முனியம்மாளுக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்று சான்று அளித்தேன். என்னிடம் காட்டப்படும் கருத்துரை நான் வழங்கியதுதான். **கருத்துரை சான்றிட்ட அலுவலக நகல் அசா.ஆ.4 ஆகும்.**

<u>1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) காயம்பட்ட நபருக்கு வலது கால் முட்டிக்காலில் வீக்ககாயத்துடன் வந்தவருக்குத்தான் சிகிச்சை அளித்தேன் என்றால் சரியல்ல. காயம்பட்ட நபர் போலிசாரால் வழங்கப்பட்ட மருத்துவ நாமூனா எதுவும் கொண்டு வந்தாரா என்றால் இல்லை. காயம்பட்ட நபருக்கு வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு நுண்கதிர் புகைப்படம் மற்றும் சி.டி. ஸ்கேன் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். விசாரணை அதிகாரிடம் மேற்படி காயம்பட்ட நபருக்கு நுண்கதிர் புகைப்படம் மற்றும் சி.டி. ஸ்கேன் எடுக்கப்பட்டது பற்றி கூறினேனா என்றால் கூறினேன்.

2) விசாரணை அதிகாரியிடம் நுண்கதிர் புகைப்படம் மற்றும் சி.டி. ஸ்கேன் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. காயம்பட்ட நபர் 13 நாட்கள் சிகிச்சை எடுத்துகொண்டார் என்றால் சரிதான். அவருக்குகான தேவைகளை அவரே பார்த்துக்கொண்டார் என்றால் சரியல்ல. காயம்பட்ட நபரை எத்தனை பேர் தாக்கியதாக அவர்களின் பெயர்களை என்னிடம் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு 70 வயது என்பதால் எலும்பு தேய்மானத்தினால் வலி ஏற்படும் என்றால் இடுப்பு பகுதியில் எலும்பு தேய்மானம் ஏற்பட்டு வலி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிக குறைவு.

3) காயம்பட்ட நபருக்கு சர்க்கரை நோய் உள்ளது என்றால் சரிதான்.

காயம்பட்ட நபர் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது கீழே விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்படும் என்றால் சரிதான்.